

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (2.1.2025) சென்னை, சைதாப்பேட்டையில், கழகத்தின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள கலைஞர் மகளிர் திறன் மேம்பாட்டு மையத்தை திறந்து வைத்து பார்வையிட்டார். இந்நிகழ்ச்சியில், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், சட்டமன்ற உறுப்பினர்கள் அரவிந்த் ரமேஷ், தாயகம் கவி, பிரபாகர ராஜா, கணபதி, அசன் மவுலானா, திராவிடர் இயக்க தமிழர் பேரவையின் தலைவர் சுப.வீரபாண்டியன், மாநகராட்சியின் மண்டல குழுத் தலைவர்கள் கிருஷ்ணமூர்த்தி, துரைராஜ், தனசேகர், மாமன்ற உறுப்பினர்கள் சைதை பகுதிக் கழக நிர்வாகிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### அண்ணா பல்கலைக் கழக

# மாணவி பிரச்சினையை அரசியல் ஆக்குவது ஏன்?

## பா.ம.க. போராட்டத்திற்கு அனுமதி மறுத்து உயர்நீதிமன்ற நீதிபதி கேள்வி!

சென்னை, ஜன. 4-

அண்ணா பல்கலைக்கழக மாணவி பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டதை கண்டித்து பாட்டாளி மக்கள் கட்சி சார்பில் நடைபெற உள்ள போராட்டத்திற்கு காவல் துறை அனுமதி மறுக்கப்பட்டதை எதிர்த்து பா.ம.க. வழக்கறிஞர் கே.பாலு சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி வேல்முருகன் முன்பு முறையீடு செய்தார்.

பாட்டாளி மக்கள் கட்சி சார்பாக சௌமியா அன்புமணி தலைமையில் சென்னை வள்ளுவர்கோட்டத்தில் நேற்று முன்தினம் போராட்டம் நடைபெற இருந்தது.

ஆனால் காவல்துறை அனுமதி மறுத்துவிட்டனர்.

இந்நிலையில் பா.ம.க. போராட்டத்திற்கு அனுமதி வழங்கக் கோரி பா.ம.க. கட்சி சார்பில் வழக்கறிஞர் பாலு நீதிபதி பி.வேல்முருகன் முன்பு முறையீடு செய்தார்.

போராட்டத்திற்கு அனுமதி வழங்க நீதிபதி மறுத்துவிட்டதுடன் ...

● பெண்கள் பாதுகாப்பில் உண்மையான கவனம் செலுத்தாமல் அண்ணா பல்கலைக்கழக பாலியல் வன்கொடுமை வழக்கை அரசியலாக்குவது ஏன் ?

● போராட்டம் நடத்தும் ஒவ்வொருவரும் முதலில் தங்கள் மனதில் கை வைத்து கூறுங்கள், பெண்களுக்கு பாதுகாப்பு கொடுக்கப்படும் என்று.

● இப்படி ஒரு சம்பவம் நடந்ததற்கு அனைவரும் வெட்கப்பட வேண்டும்.

● இந்த விவகாரத்தை அனைவரும் அரசியலாக்கி வருகிறார்கள்.

● இந்த விவகாரத்தை நீதிமன்றம் தாமாக முன்வந்து விசாரணைக்கு எடுத்துள்ளது.

● காவல்துறை வழக்குப் பதிவு செய்து நடவடிக்கை எடுத்து வருகிறது.

● இந்த விவகாரம் போராட்டம் நடத்துவதற்கான ஏற்புடையது அல்ல.

● வெறும் விளம்பரத்திற்காக இந்த போராட்டத்தை ஏற்பாடு செய்துள்ளீர்கள்.

● இந்த சமூகத்தில் ஆண், பெண் என்ற பாகுபாடு இருப்பது மிகவும் வெட்கப்பட வேண்டிய விஷயம்.

● இவ்விவகாரத்தை பத்திரிகையாளர்கள் பொறுப்புணர்வு இன்றி கடந்த 10 நாட்களாக விவாதம் செய்துவருகிறார்கள் என்று நீதிபதி வேதனை தெரிவித்தார்.

# ‘சென்னை சங்கமம்-நம்ம ஊரு திருவிழா-2025’ கலை நிகழ்ச்சிகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் ஜன.13 அன்று தொடங்கி வைக்கிறார்!

சென்னை, ஜன.4-

**சென்னையில், தை மாதம் தொடக்கத்தில் பொங்கல் நாட்களில் சென்னை சங்கமம் நம்ம ஊரு திருவிழா என்ற பிரம்மாண்ட கலைவிழா கடந்த மூன்று ஆண்டுகளாக நடத்தப்படுகிறது.**

இந்த ஆண்டின் சங்கமம் கலை நிகழ்ச்சிகளை சென்னையில், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 13.1.2025 அன்று கீழ்ப்பாக்கம் பூந்தமல்லி நெடுஞ்சாலையில் உள்ள ஏகாம்பரேஸ்வரர் ஆலயத் திடலில் தொடங்கிவைக்கிறார். சங்கமம் கலை நிகழ்ச்சிகள் 17.1.2025 வரை தொடர்ந்து 4 நாட்கள் சென்னை மாநகரின் முக்கியமான 18 இடங்களில் நடைபெறுகின்றன.

விழா நடத்துவது குறித்து, தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி கனிமொழி கருணாநிதி அவர்களின் தலைமையில் ஒருங்கிணைப்பு துறைகளுடன் ஆலோசனைக் கூட்டம் நேற்று முன்தினம் (2.1.2025), சென்னை, தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு முதன்மைச் செயலாளர் டாக்டர் பி.சந்தரமோகன், முதலமைச்சர் அவர்களின் செயலாளர் எம்.எஸ்.சண்முகம், சுற்றுலாத் துறை ஆணையர் திருமதி ஷில்பா பிரபாகர் சதீஷ், அரசு அருங்காட்சியகங்கள் துறை இயக்குநர் திருமதி கவிதா ராமு, முதலமைச்சர் அவர்களின் இணைச் செயலாளர் கோ. லட்சுமிபதி, செய்தி மற்றும் மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் மரு. இரா. வைத்திநாதன், கலை பண்பாட்டுத் துறை இயக்குநர் சே.ரா.காந்தி, இசை மற்றும் கவின் கலை பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் முனைவர் சீ.சௌமியா, தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் உறுப்பினர் செயலர் திருமதி விஜயா தாயன்பன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

முதலமைச்சர் அவர்கள் 13.1.2025 அன்று மாலை 6.00 மணியளவில் கீழ்ப்பாக்கம் பூந்தமல்லி நெடுஞ்சாலையில் உள்ள ஏகாம்பரேஸ்வரர் ஆலயத் திடலில் சென்னை சங்கமம் நம்ம ஊரு திருவிழா கலை நிகழ்ச்சிகளைத் தொடங்கி வைக்கிறார். இந்நிகழ்ச்சியில் தமிழ்நாட்டின் முன்னணி கலைஞர்களுடன் 200 கிராமிய கலைஞர்களும் இணைந்து நடத்தும் மாபெரும் இசை, நடன நிகழ்ச்சிகள் வெகுசிறப்பாக நடைபெறும்.

பெசன்ட் நகர் எலியட்ஸ் கடற்கரை, திருவான்மியூர் கடற்கரை, சென்னை இசைக்கல்லூரி வளாகம், திருவல்லிக்கேணி பாரத சாரண சாரணியர் திடல், கிண்டி கத்திபாரா வளாகம், சைதாப்பேட்டை மாநகராட்சி விளையாட்டுத் திடல், தியாகராயநகர் நடேசன் பூங்கா, நுங்கம்பாக்கம் விளையாட்டு மைதானம், எழும்பூர் அருங்காட்சியகம், கீழ்ப்பாக்கம் பூந்தமல்லி நெடுஞ்சாலையில் உள்ள ஏகாம்பரேஸ்வரர் ஆலயத்திடல், ராயபுரம் ராபின்சன் பூங்கா, பெரம்பூர் முரசொலி மாறன் பூங்கா, அண்ணாநகர் கோபுர பூங்கா, கோயம்பேடு ஜெய் நகர் பூங்கா, கே.கே.நகர் சிவன் பூங்கா, வளசரவாக்கம் லேமேக் பள்ளி வளாகம், கொளத்தூர் மாநகராட்சித் திடல், அம்பத்தூர் எஸ்.வி. விளையாட்டுத் திடல் ஆகிய 18 இடங்களில் 14.1.2025 முதல் 17.1.2025 வரை நான்கு நாட்கள் மாலை 6 மணி முதல் இரவு 9.00 மணி வரை கலைவிழா நடைபெற உள்ளது.

சென்னை சங்கமம் நம்ம ஊரு திருவிழாவில் தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களிலிருந்தும் தேர்வு செய்யப்பட்டுள்ள 1500-க்கும் மேற்பட்ட கலைஞர்கள் நையாண்டி மேளம், கரகாட்டம், காவடியாட்டம், புரவியாட்டம், இறை நடனம், தப்பாட்டம்,துடும்பாட்டம், பம்பையாட்டம், கைசிலம்பாட்டம், ஒயிலாட்டம், தேவராட்டம், சேவையாட்டம், கோலாட்டம், ஜிக்காட்டம், ஜிம்பளா மேளம், பழங்குடியினர் நடனம், சிலம்பாட்டம், மல்லர் கம்பம், வில்லுபாட்டு, கணியன் கூத்து, தெருக் கூத்து, பாவைக்கூத்து, தோல்பாவைக் கூத்து, நாடகம், கிராமிய ஆடல், பாடல் உள்ளிட்ட நிகழ்ச்சிகளுடன் சென்னையின் புகழ்பெற்ற செவ்வியல் மற்றும் மெல்லிசை கலைஞர்கள் ஆகியோரும் கலை நிகழ்ச்சி வழங்க உள்ளார்கள்.

இவற்றுடன் மகாராஷ்டிராவின் லாவணி, ராஜஸ்தான் கூமர் நடனம், மேற்கு வங்காளம் துர்சி நிருத்தியா, கோவாவின் விளக்கு நடனம், மிசோராம் மூங்கில் நடனம் ஆகியவைகளும் நடைபெற உள்ளன.

தமிழ்நாட்டின் பாரம்பரியத்தையும், பண்பாட்டினையும் வெளிப்படுத்தும் நமது நாட்டுப்புறக் கலை வடிவங்களைப் பெருநகர சென்னை வாழ் பொது மக்கள் கண்டு களிக்க ஏதுவாகவும், பல்வேறு நாட்டுப்புறக் கலைஞர்கள் பயன்பெறும் பொருட்டும் இவ்விழா சென்னை மாநகரில் நடத்தப்படுகிறது. இவ்விழா நடைபெறும் நாட்களில் அனைத்து இடங்களிலும் தமிழ்நாட்டின் பாரம்பரிய உணவு வகைகள் இடம்பெறும் வகையில் உணவுத் திருவிழாவும் நடைபெற உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

### பள்ளிக் கல்வித் துறை என்பது எங்களது பிள்ளை!

# தத்துக் கொடுக்கவோ, தாரைவார்க்கவோ அவசியம் இல்லை!

## அவதூறு பரப்புவோருக்கு – அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி கண்டனம்!

சென்னை, ஜன. 4 -

**“பள்ளிக் கல்வித் துறை என்பது எங்களது தத்துப் பிள்ளை! அதனை தத்துக்கொடுக்கவோ, தாரை வார்க்கவோ அவசியம் இல்லை” என்று பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியுள்ளார்.**

சென்னை, தலைமைச் செயலகத்தில் உள்ள நாமக்கல் கவிஞர் மாளிகையில் பள்ளிக் கல்வித் துறை கூட்டரங்கில் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர், அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில், நேற்று முன்தினம் (02.01.2025) பள்ளிக்கல்வித் துறை மானியக் கோரிக்கை, அறிவிப்புகள் மற்றும் செயல்பாடுகள் குறித்து ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

அதன் பின்னர், பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின் படி ஒரு மகிழ்ச்சியான ஒரு பெருமையான நாளாக இன்று எங்கள் துறை பணியை தொடங்கியிருக்கிறோம். ‘தி இந்து’ ஆங்கில நாளிதழில் இடைநிற்றல் விகிதச்சார சரிவில் மாணவர்களின் அளவில் ஒரு முக்கிய தமிழ்நாட்டில் பள்ளிப் படிப்பை தொடங்கி 100 மாணவர்களில் 99 மாணவர்கள் 2019ல் மேல்நிலைப்படிப்பை முடித்தனர்.

நடப்பு ஆண்டில் 2024ல் 100-ஆக உயர்த்துள்ளது. பெண்களில் இந்த எண்ணிக்கை 97.5 லிருந்து 100-ஆக உயர்ந்துள்ளது. மேல்நிலைப் பள்ளியில் ஆண்களின் சதவீதம் 81.3 லிருந்து 89.2 ஆகவும், பெண்களின் சதவீதம் 89.4 லிருந்து 95.6 ஆக உயர்ந்துள்ளது என்று தி.இந்து சிறப்பு கட்டுரை வெளியிடப்பட்டு பாராட்டியுள்ளது.

**முதலமைச்சர் வழிகாட்டல்!**

இன்று நடைபெற்ற துறை தலைவர்களுக்கான ஆய்வுக் கூட்டத்தில் வருகின்ற சட்ட மன்றம் கூடும்போது ஏற்கனவே அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளின் தற்போதைய நிலை மற்றும் மாணவ செல்வங்களின் கல்வித் தரத்தை மேலும் மேம்படுத்துவது புதியதாக என்ன திட்டங்களை கொண்டு வரலாம். துறையை மேலும் மேம்படுத்திட என்ன செய்யலாம் என்று துறை தலைவர்களுக்களுடன் ஆலோசிக்கப்பட்டது. பழைய அறிவிப்புகளின் நிலை குறிப்பாக சமக்ராசிக்ஷா மூலம் செயல்படுத்தக் கூடிய திட்டங்கள் சார்ந்து துறை தலைவர்களுடன் ஆலோசனை செய்யப்பட்டது. ஒவ்வொரு ஆய்வுக் கூட்டத்தின் போது பேசப்பட்ட விவரங்களை முதலமைச்சர் அவர்களுக்கு வழங்கி அவர்களின் வழிகாட்டுதலின்படி புதியதாக அறிவிக்கப்பட வேண்டிய திட்டங்கள் மற்றும் ஏற்கனவே அறிவிக்கப்பட்ட திட்டங்களின் நிலை சார்ந்து



விவாதிக்கப்பட்டது.

**கேள்வி:** தனியார் பள்ளிகள் சங்கம் நடத்திய கூட்டத்தில் 500 அரசுப் பள்ளிகளை தத்தெடுக்கப்போவதாக கூறியதற்கான தீர்மானம் குறித்து?

**அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி:** பத்திரிகைத் துறை மற்றும் ஊடகத்துறை அதுசார்ந்து வரப்படும் செய்திகள் குறிப்பாக பத்திரிகையில் வரும் செய்தி நம்பகத்தன்மையாக இருக்க வேண்டும். வருகின்ற செய்திகள் சரியான செய்தியாக வந்துள்ளதா என சரி பார்க்க வேண்டும். செய்திகள் வரும்போது ஒன்றுக்கு இரண்டு முறை சரி பார்க்க வேண்டும். தனியார் பள்ளிகள் சங்கத்தில் பள்ளிக்கல்வித் துறை கலந்து கொண்ட நிகழ்ச்சியில் சங்கத்தின் மூலம் கோரிக்கை ஏதும் அரசு பள்ளிகளை தத்து எடுப்பது தாரை வார்ப்பது போன்ற செய்திகள் வந்துள்ளதா என்பதை முழுமையாக உறுதி செய்து தான் பத்திரிகைக்களில் செய்தியாக வர வேண்டும் எனவும் அரசு பள்ளிகளை தத்து எடுப்பது, தாரைவார்ப்பது போன்ற செய்திகள் வரும் போது அது சார்ந்து உடனடியாக கண்டன அறிக்கை கொடுப்பது ஏற்றுக்கொள்ளமுடியாததாக பார்க்கின்றேன்.

**அவதூறு பரப்புவதா?**

துறைத் தலைவர்களுக்கான ஆய்வுக்கூட்டத்தில் எங்களுடைய துறை தலைவர்களே இதுபோன்ற செய்திக்கு வருத்தம் தெரிவித்தாகவும் முழுமையாக தகவல்கள் தெரிந்து கொள்ளாமல் அவதூறு பரப்புவது வன்மையாக கண்டிக்கிறேன் என செய்தி வெளிவந்ததற்கு பள்ளிக் கல்வித் துறை அதிகாரிகள் சார்பாக தான் வன்மையாக கண்டனத்தை தெரிவித்துள்ளார்.

CSR Activity மூலமாக நம்ம School நம்ம ஊரு பள்ளி தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 5 லட்சம் நிதி கொடுத்து ஆரம்பிக்கப்பட்டது. தற்போது 504 கோடி ரூபாய் CSR Activity மூலமாக நம்ம School நம்ம ஊரு பள்ளிக்கு வந்துள்ளது. 350 கோடிக்கான வேலைக்கள் நடைபெற்று கொண்டு இருப்பதாகவும் அதற்கு தங்களுடைய பங்களிப்பு தருவதாக கூறியதற்கு நன்றி கூறிய தாகவும் தெரிவித்துள்ளார். தற்போது சமக்ராசிக்ஷா கீழ் பணியாற்றும் 32 ஆயிரம் ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்களுக்கு ரூபாய் 500 கோடிக்கான சம்பளத்தை மாநில அரசு வழங்கி வருவதாக தெரிவித்துள்ளார்.

இதன் மூலம் பள்ளிக் கல்வி சார்ந்த திட்டம் பணிகளில் ஏதும் தடைப்பட்டுவிடக்கூடாது என முதலமைச்சர் தெரிவித்துள்ளார். அறிக்கை வெளியிட்ட பத்திரிகைக்கு தொடர்புக் கொண்டு விவரம் தெரிவிக்கப்பட்டதன் அடிப்படையில் தவறாக புரிந்து கொண்டதாகவும் விளக்கம் அளிக்குமாறு கோரியதற்கிணங்க, சார்ந்த தனியார் பள்ளிகள் சங்கம் உரிய விளக்கம் அளித்துள்ளனர். தமிழ்நாடு பள்ளிக் கல்வித் துறை சார்ந்து பல்வேறு விதமான திட்டங்கள் கொண்டு வரப்பட்டு முதலமைச்சர் அவர்களால் பள்ளிக் கல்வித் துறையில் 60க்கும் மேற்பட்ட திட்டங்களை அறிவித்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள்.

அடுத்த நிலைக்கு பள்ளிக் கல்வித் துறை கொண்டு வர செயல்பட்டு கொண்டிருக்கும் நிலையில், ஒரு செயல்கள் செய்யும் போது அதுசார்ந்து போகும் போது ஊக்கப்படுத்தவும், தவறாக இருக்கும் பட்சத்தில் தெரிவிக்கவும் நாங்கள் சொல்லும் விளக்கம் ஏற்றுக் கொள்ளும்படியாக இல்லை என்றால் கண்டனம் தெரிவிக்கவும், விளக்கம் எதுவும் கேட்காமல் விவரம் தெரிவிக்காமல் அவசர அவசரமாக செய்தி வெளியீடும் பத்திரிகையாளர்கள் ஒட்டுமொத்த தமிழக மக்களுக்கும் இது சார்ந்து கண்டனம் தெரிவித்த அனைத்து தலைவர்களுக்கும் நான் தெரிவிப்பது பள்ளிக் கல்வித் துறை என்பது எங்களது பிள்ளை அதனை தத்து கொடுக்கவும், தாரை வார்க்கவும் அவசியம் இல்லை எனவும் தெரிவித்துள்ளார். இதனை வன்மையான கண்டனத்துடன் வருத்தத்துடன் பதிவு செய்து கொள்கிறேன்.

**முற்றிலும் தவறானது!**

**கேள்வி:** CSR Activity என்பது தனியார் அமைப்புகளோ, நிறுவனமோ தனியார் பள்ளிகள் அரசு பள்ளிகள் நடத்தும் போது பள்ளிக் கல்வித் துறையிடமே வழங்கலாமே?

**அமைச்சர்:** CSR Activity என்பது பள்ளிகளுக்கு தேவையான மேசைகள், நிதி உதவிகள் செய்வது சார்ந்தது. முன்னாள் மாணவர்கள், நான் படித்த அரசு பள்ளியில் தான் என தனியார் பள்ளிகள் சங்கத்தை சார்ந்தவர்கள் அரசு பள்ளிகளுக்கு CSR Activity 500 பள்ளிகளுக்கு பங்களிப்பு செய்வதாகக கூறினார். ஒட்டு மொத்தமாக நிர்வாகத்தை வழங்குவதாக கூறுவது முற்றிலும் தவறானது.

**ஒன்றிய அரசின் பிளாக்மெயில் மிரட்டல்!**

**கேள்வி:** RTE நிதியுதவி நிலுவை உள்ளதை பெற்று தர வலியுறுத்தி தீர்மானம் நிறைவேற்றியுள்ளனர்?

**அமைச்சர் :** ஒன்றிய அரசு RTE நிதியுதவியை இன்னும் ஒன்றிய அரசு வழங்கவில்லை நிலுவையில் தான் உள்ளது. ஒன்றிய அரசு மாநில அரசுக்கு தர வேண்டிய நிதியை தர மறுக்கிறது. அரசு பள்ளி மாணவர்களை நாங்களே வளர்த்து எடுக்கிறோம். கல்வியை மாநில பட்டியலுக்கு கொண்டு வர வேண்டும்.

சமக்ராசிக்ஷாவின் மூலம் சென்சரி பார்க், ரோபோட்டிக் கொண்டு வருவதாக அறிவித்துள்ள நிலையில் ஒன்றிய அரசு 60 சதவீதம் 40 சதவீதம் நிதியை மாநில அரசிற்கு வழங்க வேண்டிய நிதியை வழங்காமல் உள்ளதால் மேற்கண்ட திட்டங்களின் எண்ணிக்கையை குறைக்க வேண்டிய சூழ்நிலை உள்ளது. ஒன்றிய அரசு பிடிவாதமாக இருப்பதை பிளாக்மெயில் மிரட்டலாகவே பார்க்கிறேன்.

**கேள்வி:** அரசுப் பள்ளிகளில் கழிவறைகள் வசதி செய்வது குறித்து?

**அமைச்ர் :** அமைச்சர்: CSR மற்றும் பேராசிரியர் அன்பழகனார் பள்ளி மேம்பாட்டு திட்டத்தின் மூலம் சிறப்பு கவனம் செலுத்தி பெண்கள் படிக்கும் பள்ளிகளுக்கு கழிவறை வசதிகள் செய்து கொடுக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

**கேள்வி:** தேசிய கல்விக் கொள்கை குறித்து ?

**அமைச்சர் :** கொள்கை ரீதியாக இருக்கிறோம். எக்காரணம் கொண்டும் விட்டு கொடுப்பதாக இல்லை. ஒன்றிய அரசு கையெழுத்திட அழுத்தம் கொடுக்கிறது எக்காரணம் கொண்டும் ஒன்றிய அரசிடம் அடிபணிய வேண்டிய அவசியம் இல்லை.

**ஆசிரியர் நியமனம் நல்ல தீர்ப்பு வரும்!**

**கேள்வி:** ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் ஆசிரியர் பணி நியமனம் குறித்து?

**அமைச்சர் :** ஆசிரியர் நியமனம் குறித்த வழக்கு நீதிமன்றத்தில் உள்ளது. வெகுவிரைவில் தீர்ப்பை பெற்று பணி நியமனம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். தற்போது நீதிமன்ற உத்தரவிற்காக காத்திருக்கிறோம். நல்ல தீர்ப்பு விரைவில் வரும்.

**கேள்வி:** ரூபாய் 44 ஆயிரம் கோடி பள்ளிக் கல்வித் துறைக்கு ஒதுக்கப்பட்ட நிதி குறித்து?

**அமைச்சர்:** சட்டப்பேரவை மானியக் கோரிக்கையின் போது பள்ளிக் கல்வித் துறையில் செயல்படுத்தப்பட்டுள்ள திட்டங்கள் என்னென்ன என்பது குறித்து விரிவாக எடுத்துரைக்கப்படும். 2011 முதல் 2021 ஆம் ஆண்டு வரை 10 ஆண்டுகளில் நகராமல் இருந்த பள்ளிக் கல்வித் துறையை கடந்த 3 ஆண்டுகளில் சிறப்பான துறையாக உருவாக்கி இருக்கிறோம். ஒன்றிய அரசு வகுத்துள்ள 20 செயல்பாடுகளில் 18 செயல்பாடுகளில் முதல் இடத்தில் இருக்கிறோம்.

பள்ளிக் கல்வித் துறையில் என்னென்ன செய்துள்ளோம் என்பதை கணக்கீடு செய்து பா.ஜ.க. மாநில தலைவர் அண்ணாமலை அவர்கள் கேள்விகளை கேட்க வேண்டும். விளம்பரத்திற்காக இது போன்ற எக்ஸ் தளங்களில் பதிவுகளை பதிவிடுகிறார்.

இவ்வாறு அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி பேட்டியளித்தார்.

இக்கூட்டத்தில், பள்ளிக்கல்வித் துறை செயலாளர், திருமதி. சோ.மதுமதி, தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் முனைவர், பொ.சங்கர், ஆசிரியர் தேர்வு வாரியத் தலைவர், பி.ஸ்ரீவெங்கடப்பிரியா, ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி மாநில திட்ட இயக்குநர், திருமதி. மா.ஆர்த்தி, பள்ளிக்கல்வித் துறை, சிறப்புச் செயலாளர், திருமதி. ச. ஜெயந்தி, தமிழ்நாடு மாதிரிப் பள்ளிகள், உறுப்பினர் செயலர், இரா.சுதன், (ப.நி.), தனியார் பள்ளி இயக்குநர், மு.பழனிச்சாமி, தொடக்கக்கல்வி இயக்குநர் பூ.அ. நரேஷ், மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநர், திருமதி. த.உமா, அரசு தேர்வுகள் இயக்ககம், இயக்குநர், திருமதி ந.லதா, பள்ளிக் கல்வித் துறை இணை இயக்குநர்கள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



குமரி திருவள்ளுவர் சிலை வெள்ளி விழாவை முன்னிட்டு தமிழ் வளர்ச்சி துறை சார்பில் மாநில அளவில் நடத்தப்பட்ட திருக்குறள் முற்றோதல் போட்டியில் 1330 குறள்களையும் ஒப்பித்து வெற்றி பெற்ற மாணவ, மாணவியரை தஞ்சை நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி தனது அலுவலகத்தில் சந்தித்து பாராட்டு கேடயம் மற்றும் அவர்களுக்குத் தேவையான கல்வி உபகரணப் பொருட்களை வழங்கி பாராட்டினார்.



திருவெண்ணைநல்லூர் முன்னாள் பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் ராதாகிருஷ்ணன் மற்றும் விழுப்புரம் தெற்கு மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை அமைப்பாளர் இரா.கிருஷ்ணராஜ் ஆகியோர் இல்ல திருமண விழாவில் வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, திருமதி விசாலாட்சி பொன்முடி ஆகியோர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார்கள். மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாவட்ட துணை செயலாளர் தயா . இளந்திரையன், ஒன்றிய செயலாளர் பி வி ஆர் சு.விசுவநாதன், பேரூர் செயலாளர் பூக்கடை கணேசன், ஒன்றிய குழுத் தலைவர் ஓம் சிவ சக்திவேல், துணைத் தலைவர்கள் ஜோதி, நிர்மல்ராஜ் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.